**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF M/S. SRI GANESH BLUE METALS – UNIT II OVER AN EXTENT OF 2.94.0 HECTARE LOCATED IN S.F.NOS.123/13B2, 125/1A, 125/1B & 125/2 OF MENALLUR VILLAGE AND S.F.NOS. 91/9C, 91/10B, 93/3A, 93/3B, 93/3C, 93/3D, 93/3E, 93/4A, 93/4B & 93/6 OF GIRIJAPURAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 06.08.2025 AT 11.00 AM IN M/S. SRI LAKSHMI VIJAYACHANDRAN MARRIAGE HALL, MATHUR VILLAGE, VEMBAKKAM TALUK & TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. Siva | Revenue Divisional Officer(FAC),<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 3. | Dr. S. Sugashini | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 5. | Thiru. M. Tamil Mani | Tahsildar,<br>Vembakkam,<br>Tiruvannamalai District. |
| 6. | Thiru. A. K. Arul Murugan | Assistant Geologist,<br>Geology and Mining,<br>Tiruvannamalai District. |
| 7. | Public and NGOs | 75 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Cheyyar who presided over the public Hearing meeting, other Government officials, the public & the NGOs and explained the need for the conduction of Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Rough stone and gravel quarry as follows:

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. Sri Ganesh Blue Metals – Unit II over an extent of 2.94.0 hectares in Menallur and Girijapuram Villages, Vembakkam Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) as per the Environmental Impact Assessment Notification 2006."

"As per the EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectares require the conduction of public hearing meeting for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notices for this public hearing were published in dailies of "The Times of India" (English) & "Daily Thanthi" (Tamil) on 02.07.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone and gravel quarry of M/s. Sri Ganesh Blue Metals – Unit II which is to be conducted at M/s. Sri Lakshmi Vijayachandran Marriage Hall on 06.08.2025 @ 11.00AM."

The District Environmental Engineer further stated that "The project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when the public should register their name & village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Tiruvannamalai will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Cheyyar requested the project proponent to explain about the proposed rough stone and gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail and requested the general public to mention their name and their village name while expressing their views, suggestions and comments on the said project.

On behalf of the project proponent, Thiru. M. Sheik Nawas, Coordinator, M/s. Geo Exploration and Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. Sri Ganesh Blue Metals – Unit II) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Cheyyar requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one.

The following are the views/suggestions/comments represented by the public:

**1. Thiru. Kuppan, Former Village Council President, Menallur Village.**

He stated that, "I extend my warm greetings to the Revenue Divisional Officer, who has graciously taken the lead and is currently conducting the public hearing for Sri Ganesh Blue Metals Unit II, located in Menalur Girijapuram villages, Vembakkam taluk, Tiruvannamalai district, for setting up a rough stone & gravel quarry unit. I also extend my greetings to the District Environmental Engineer, Tahsildar – Vembakkam and other government officials who are present and facilitating this process. We wholeheartedly agree to the establishment of Sri Ganesh Blue Metals in our village. They are following all the government rules and regulations as specified by the officials for setting up the stone quarry. They are following all the procedures given by the government. They have constructed compound wall with sheets around the quarry to prevent dust from spreading outside. Their blasting operations are being carried out without causing significant vibrations or noise. They're also very cooperative with the local public and work in harmony with the community. They are native sons

of this land. They provide all the necessary basic amenities to the people. They collaborate with the community and cater to the needs of temples, schools, and similar establishments by providing all required amenities. The establishment of this quarry has elevated Menallur Panchayat to a prominent position in Tiruvannamalai District, and this is the moment to prove it. When I was the former Panchayat President, we faced a significant financial shortage. Now, we receive one or two crore rupees as funds every year. If our Panchayat Presidents decide to repair a road, they can swiftly execute it within a month, whether through cement, tar, or paver block. When the quarry provides all the necessary facilities for drinking water through the Mineral Resource Fund, our Panchayat emerges as a model Panchayat. With facilities like high-mast lighting, Our Panchayat has risen to become a superior and hygienic Panchayat, capable of providing such facilities and opportunities. As per current government norms, when creating such infrastructure, a contribution of ₹5 lakhs per individual is required, and our school receives approximately ₹50 lakhs in funding. The Mineral Resource Fund is useful for our school in constructing a chemistry laboratory, which is essential for the students. In addition to that, the funds are very useful for renovating the old lab and school office. I would like to inform that Menallur School emergence as a model school is made possible solely through the Mineral Resource Fund. We would like to inform that Ganesh Blue Metals operates in accordance with government regulations, and we give our full consent for Ganesh Blue Metals to function" and concluded his speech by **expressing his support** for the proposed quarry.

**2. Mr. Sathasivam, Menallur Village.**

He stated that, "The Ganesh Blue Metals Unit-II quarry is being set up in a location that will not cause any disturbance or harm to the local public. We wholeheartedly welcome the establishment of this quarry. One of their quarry is already under operation. The quarry has implemented various safety measures as per government regulations and operates the quarry responsibly by planting saplings and constructing protective fences around it. They operate the quarry by implementing all government-prescribed safety measures, planting saplings around it, and constructing protective

fences. On that basis, I wholeheartedly welcome the establishment of this quarry" and concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**3. Thiru. R. Perumal, Girijapuram Village.**

He stated that, "Sri Ganesh Blue Metals Phase-2 has submitted application for environmental clearance. Due to the establishment of quarries, the land prices have been raised from ₹5,000 to ₹50,000. Everyone has got employment opportunities. There have been no issues with Sri Ganesh Blue Metals. They work in harmony and provide assistance to the village whenever needed. They have done a lot for educational development in the locality. I have seen it from my experience. I wholeheartedly support the setting up of this quarry" and concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**4. Thiru. M. C. Ravi, Menallur Village.**

He stated that, "There are no objections to the establishment of this quarry. But those who sold land to the quarry are now wandering around, saying they have no way to let their goats & cattle for grazing. Did they buy the land for grazing goats and cattle? They purchase land to extract the investment. They're talking about all sorts of things. The crushers have provided employment to over a thousand people in our village. We can express our gratitude for that. In every village, there are about four festivals celebrated annually. The village people approach them and request donations for all the four festivals. They donate for all purposes and construct temples. I express my gratitude for their generosity. I humbly request that water be sprinkled on the roads around 8:30 am when small children are heading to school which would be really helpful." and concluded his speech by **expressing his support** for the establishment of the quarry.

**5. Thiru. Kumarasamy, Girijapuram Village.**

He stated, "I would like to extend heartfelt gratitude on behalf of our Grijapuram village people to everyone who have come for this public hearing meeting. Moreover, the companies that establish quarries here have been consistently providing our schools with all the required equipment in an outstanding manner. Not only that, but whenever we need funds for temple construction or other community needs, we approach them and they generously donate. Because of this, our village is prospering. Therefore, we have no objections for the establishment of this quarry. "On behalf of our village, I welcome this quarry" and concluded his speech by **supporting the establishment** of the quarry.

**6.Thiru. S. Prathap, Poonaithangal Village.**

He stated, "Whether people are happy about the quarry getting established or not, everyone gets employment opportunities. It would be good if the trucks could avoid travelling during school hours, from 7:30 am to 10 am. Similarly, it would be good if the trucks could avoid travelling during the evening hours, from 4:30 pm to 6 pm. When company vehicles come, the trucks don't give way. Please instruct them to give way. Even when riding a two-wheeler and horning, the trucks are not responding. Please instruct the drivers accordingly. They overload their vehicles. In Menallur, stones are falling from the trucks. Despite being required to cover the load with gunny bags, they fail to do so. Kindly instruct them" and concluded his speech.

**7. Thiru. Muniyandi, Menallur Village.**

He stated, "I don't want to elaborate much. The village panchayat president, Kuppan, has already addressed everything. I'm just reiterating what he said, that's all. Sri Ganesh Blue Metals helps all the poor people and never says 'no' to anyone when asked for assistance. They wholeheartedly provide assistance to schools, villages, and festivals, always helping without refusal. The crusher is functioning well. As he mentioned, there are no materials going out from this crusher through Menallur. It's actually from another crusher that materials are being transported through Menallur. Materials from this proponent's crusher won't come through this

route. I would like to clarify this very clearly. I hereby state that I have no objections to the quarry obtaining permission" and concluded his speech by saying **thanks & supporting the establishment** of the quarry.

**8. Thiru. Venkatesan, Girijapuram Village.**

He stated, "I welcome the establishment of Ganesh Blue Metals quarry and have no objections" and concluded his speech by saying thanks & **supporting the establishment** of the quarry.

**9. Thiru. Duraimurugan, Menallur Village.**

He welcomed the Revenue Divisional Officer and the District Environmental Engineer and stated as follows: "Sri Ganesh Blue Metals Unit is operating safely and following the rules and regulations. This quarry has provided our Menallur village with 15 high-tower lights so far. They have provided road facilities, drinking water facilities, and also infrastructure support to various schools, including Bagavandhapuram Primary School and Menallur Higher Secondary School. Last time, Ganesh Blue Metals donated 8 lakh rupees, and currently, we have 28 lakh rupees in our bank account. Five individuals have collectively made this contribution. We plan to utilize the 28 lakh rupees, with permission from the District Education Officer, to construct a lab for the Higher Secondary School. As a result, the schools have undergone significant development. Our former Panchayat President, brother Kuppan, has already shared a lot of information about this. This industry has brought numerous benefits to our village, including road facilities, drinking water, and electricity to 90% of Menallur village houses. We will lay cement roads in Yadav Street and Mudaliar Street within a month, and that's the only two streets left. Our village has developed significantly due to this industry. They are operating the industry safely. Similarly, modern explosives have been introduced. They are operating this quarry without causing any disturbance to the village. They are providing significant funding to the temples. Ganesh Blue Metals provides assistance to the schools whenever they are approached for help. Therefore, I welcome the granting of a license to this quarry. I extend my support" and concluded his speech by **supporting the establishment** of the quarry.

**10. Thiru. Venkatesh, NGO.**

He stated, " Respected Sir. Good morning everyone. I really appreciate the management of Ganesh Blue Metals. He is promoting rural employment. This quarry proposal would generate around 38 job opportunities to the local people. It is also conveyed to provide technical and non-technical skilled employment opportunities to all the local people in Menallur and Girijapuram villages. Also, proposed to develop dense trees and other plantations in and around the quarry. This will control the dust" and concluded his speech by **supporting the establishment** of the quarry.

**11.Thiru. T. Rathinam, Girijapuram Village.**

He stated, "I wholeheartedly welcome the establishment of the Ganesh Blue Metals quarry." With this statement, he concluded his speech, **expressing his support** for the quarry's setup.

**The following 27 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone & gravel quarry. All the 26 nos. have expressed their support to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Thiru. D. Sampath, Vembakkam, Tiruvannamalai. | Expressed his opinion over the proposed quarry |
| 2. | Tmt. Avutta Mangamma, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Tmt. Gundala Saidama, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. K. Sarada, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. R. Venkatesh, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. J. Raja, Dharmapuri. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Thiru. T. Satti Reddy, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. V. Manikandan, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 9. | Thiru. M. Sivanathan, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 10 | Thiru. V. Suresh, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 11 | Thiru. K. Saravana, Kanchipuram. | Expressed support in favour of the proposed quarry |
| 12 | Thiru. U. Sankaraiah, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 13 | Thiru. K. Sreenivasa Murthy, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 14 | Thiru. Ankaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 15 | Thiru. B. Balakrishna, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 16 | Thiru. U. Ramachandra, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 17 | Thiru. Kayapati Naresh, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 18 | Thiru. B. Sunna Rai, Tirupati. | Expressed support in favour of the proposed quarry |
| 19 | Thiru. Venkatesh boya, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 20 | Thiru. S. Narasimmahalu, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 21 | Tmt. S. Fathima, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 22 | Thiru. A. Subramanyam, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 23 | Thiru. T. Sudhakar, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 24 | Thiru. Venkata Subbaiya, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 25 | Thiru. Muthu Raja, Ramnad. | Expressed support in favour of the proposed quarry |
| 26 | Tmt. Aakkalaiahh Doti, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 27 | Thiru. Palle Naveen Kumar, Telangana. | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Cheyyar, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 02.07.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (12 pages/75 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 27 nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer(FAC),**
(4/6)
**Cheyyar.**

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமம் புல எண்கள். 123/13B2, 125/1A, 125/1B & 125/2, மற்றும் கிரிஜாபுரம் கிராமம், புல எண்கள். 91/9C, 91/10B, 93/3A, 93/3B, 93/3C, 93/3D, 93/3E, 93/4A, 93/4B & 93/6 –ல் 2.94.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ கணேஷ் புளூ மெட்டல்ஸ் – யூனிட் II சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 06.08.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாங்கால் கூட்ரோட்டில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சீ. சிவா | வருவாய் கோட்ட அலுவலர்<br>(முழு கூடுதல் பொறுப்பு),<br>செய்யாறு,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | முனைவர். சி. சுகாஷினி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 5. | திரு.M. தமிழ்மணி | வட்டாட்சியர்,<br>வெம்பாக்கம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 6. | திரு.எ.கி. அருள்முருகன் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (75 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு

தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் மற்றும் கிரிஜாபுரம் கிராமங்களில், 2.94.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ கணேஷ் புளூ மெட்டல்ஸ் – யூனிட் II சாதாரண கற்கள் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006–ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். ஸ்ரீ கணேஷ் புளூ மெட்டல்ஸ் – யூனிட் II சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் 06.08.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 02.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை

தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. எம். ஷேக் நவாஸ், ஒருங்கிணைப்பாளர், தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் (தி/ள். ஸ்ரீ கணேஷ் புளூ மெட்டல்ஸ் – யூனிட் II சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. குப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், " திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனலூர் கிரிஜாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் யூனிட் 2 அவர்கள் இப்பொழுது சிறு கற்கள் மற்றும் கிராவல் அமைப்பதற்காக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்து தலைமை பொறுப்பு ஏற்று நடத்தி கொண்டு இருக்கின்ற செய்யார் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் அதனை முன் நின்று நடந்தி கொண்டிருக்கின்ற மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அம்மா அவர்களுக்கும் வெம்பாக்கம் வட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் ஏனைய அரசு அதிகாரிகளுக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் ஊரில் ஸ்ரீ கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் அமைப்பதற்கு எங்களுக்கு பூர்வீக சம்மதம். ஏனென்றால் அவர்கள் அரசு விதிமுறைகள் பிரகாரம் அரசு என்னென்ன இந்த சிறு கற்கள் உடைப்பதற்கு திட்டங்களை கையாள வேண்டும் என்று இப்பொழுது அதிகாரி அவர்கள் சொன்னாரோ அதை அனைத்தையும் அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள். கல்குவாரியை சுற்றி தூசி வெளியே செல்லாதவாறு தகடுகளால் சுற்றுச் சுவர் அமைத்துள்ளார். அவர்கள் வெடி வைப்பது எந்த அதிர்வும் இல்லாமல் சத்தம் இல்லாமல் இருக்கிறது. அதுபோல பொதுமக்களுடன் அரவணைப்போடு செயல்படக் கூடியவர்கள். இந்த மண்ணின் மைந்தர்கள் அவர்கள். மக்களுக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளும் அவர்கள் செய்து தருகிறார்கள். கோயில், பள்ளிக்கூடம் போன்ற விஷயங்களுக்கு நாடினால் அனைத்து வசதிகளும் செய்து தரக்கூடிய, பொது மக்களோடு இணைந்து செயல்படுகிறார்கள். இந்த கல்குவாரி அமைப்பதனால் மேனல்லூர் பஞ்சாயத்து இந்த திருவண்ணாமலை மாவட்டத்திலே முதன்மையான பஞ்சாயத்தாக திகழ்கிறது என்பதை இங்கு நிரூபிக்கின்ற நேரம் இது. நான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும்போது எங்களுக்கு நிதி பற்றாக்குறை அதிகமாக இருந்தது. இப்போது ஒரு வருடத்திற்கு ஒரு கோடி இரண்டு கோடி ரூபாய் நிதி வரும்போது நமது ஊராட்சி மன்ற தலைவர்கள் இந்த

சாலையை சீரமைக்க வேண்டும் என்றால் உடனே ஒரே மாதத்தில் அங்கு சிமெண்ட் சாலையாகட்டும், தார் சாலையாகட்டும், பேவர் பிளாக் சாலையாகட்டும் உடனடியாக செய்கிறார்கள். குடிநீருக்கு உண்டான அனைத்து வசதிகள், உயர்ந்த மின் விளக்குகள் போன்ற அனைத்து வசதிகளும் இந்த கல்குவாரி கனிம வள நிதியிலிருந்து செய்யும்போது எங்களுடைய பஞ்சாயத்து சிறப்பான பஞ்சாயத்தாக திகழ்கிறது. இது போன்ற வசதி வாய்ப்புகளை தரக்கூடிய அளவுக்கு இங்கு எங்கள் பஞ்சாயத்து மிகவும் ஒரு சுகாதாரமாக ஒரு மேன்மையான பஞ்சாயத்தாக உயர்ந்து இருக்கிறது. தற்போது அரசு விதிமுறைப்படி இது போன்ற அமைப்பை உருவாக்கும் போது ஒருவர் ஐந்து லட்சம் ரூபாய் பள்ளிகளுக்கு கொடுக்க வேண்டும். கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் எங்கள் பள்ளியில் நிதியாக இருக்கின்றது. எங்கள் பள்ளிக்கூடத்திற்கு இந்த கனிமவள நிதியிலிருந்து, பள்ளிக்கு வேண்டிய ரசாயன ஆய்வகம் கட்டுவதற்கு பயனுள்ளதாக அமைகிறது. அது மட்டுமில்லாமல் பழைய ஆய்வகம், பள்ளி அலுவலகம் புதுப்பிக்க இந்தப் பணம் மிகவும் வசதியாக இருக்கிறது. ஒரு மாதிரி பள்ளியாக மேனல்லூர் பள்ளி திகழ்வதென்றால் இந்த கனிம வள நிதியிலிருந்து தான் இதெல்லாம் நடக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அரசு விதிமுறையின் படி கணேஷ் புளூ மெட்டல்ஸ் நடந்துகொள்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு இந்த கணேஷ் புளூ மெட்டல் அமைவதற்கு எங்களுக்கு முழு சம்மதம்." என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. சதாசிவம், மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த ஸ்ரீ கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் யூனிட் –2 கல்குவாரி பொதுமக்களுக்கு எந்த இடையூறு இல்லாத எந்த பாதிப்பும் இல்லாத இடத்தில் தான் அமையவிருக்கிறது. இந்த கல் குவாரி வருவதை நாங்கள் தாராளமாக வரவேற்கிறோம். இவர்களது கல்குவாரி ஏற்கனவே ஒன்று இயங்கி வருகிறது. இவர்கள் அரசு நியமித்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள்

என்னென்னவோ முறைப்படி செயல்படுத்தி, குவாரியை சுற்றி மரக்கன்றுகள் நட்டு, தடுப்பு வேலிகளை எல்லாம் எழுப்பி தான், குவாரி இயங்குகிறது. அதன் அடிப்படையில் இந்த கல் குவாரி அமைவதை தாராளமாக வரவேற்கிறேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**3. திரு. R. பெருமாள், கிரிஜாபுரம் கிராமம்.**

இவர் கூறுகையில், ஸ்ரீ கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் ஃபேஸ்–2 சுற்றுச்சூழல் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளார்கள். கல்குவாரிகள் வந்ததால் தான் நிலத்தின் விலை 5000 யில் இருந்து 50,000 வரை உயர்ந்துள்ளது. அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் மூலம் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. இவர்கள் ஊருக்கு எந்த ஒரு உதவி என்றாலும் செய்து தருகிறார்கள். கல்வி வளர்ச்சிக்கு தான் அதிகமாக செய்து தருகிறார்கள். என் அனுபவத்தில் நான் பார்த்திருக்கிறேன். இந்த கல்குவாரி வருவதற்கு என் முழு சம்மதத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. M.C. ரவி, மேனல்லூர் கிராமம்.**

இவர் கூறுகையில், இந்த கல்குவாரி வருவதற்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் இந்த கல்குவாரிக்கு நிலம் விற்றவர்கள் ஆடு மாடு மேய்ச்சலுக்கு வழி இல்லை என்று சொல்லிக் கொண்டு சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆடு மாடு மேய்ப்பதற்காவா அவர்கள் நிலம் வாங்குகிறார்கள்? போட்ட முதலினை எடுப்பதற்காகத்தான் நிலம் வாங்குகிறார்கள். அதை விட்டுவிட்டு ஏதேதோ பேசுகிறார்கள். எங்கள் ஊரில் இந்த கிரஷர்கள் வந்ததினால் ஆயிரம் பேருக்கு மேல் வேலை செய்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளலாம். ஒரு கிராமத்தில் வருடத்திற்கு நான்கு திருவிழாக்கள் நடக்கிறது அனைத்திற்கும் நன்கொடை தருகிறார்கள். கோவில்கள் கட்டி தருகிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காலை 8.30 மணி

அளவில் சின்ன சின்ன பிள்ளைகள் பள்ளிகளுக்கு செல்கிறார்கள், அந்த நேரத்தில் சாலைகளில் தண்ணீர் விட்டால் நன்றாக இருக்கும் என்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன், என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. குமாரசாமி, கிரிஜாபுரம் கிராமம்.**

இவர் கூறுகையில், " இங்கு கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அனைவருக்கும் நம்முடைய கிரிஜாபுரம் கிராமத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த கல்குவாரியை அமைக்கும் எந்த நிறுவனமாக இருந்தாலும் நம்முடைய பள்ளிகளுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் மிகச் சிறப்பாக வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் எந்த ஒரு கோவில் கட்டினாலும் மற்றும் பொது தேவைகளுக்கு சிறு பணம் தேவைப்பட்டாலும் நாம் அங்கு போய் அவர்களிடத்தில் கேட்கும் போது அவர்கள் தாராளமாக கொடுக்கிறார்கள். அதனால் நம்முடைய ஊர் சிறப்பாக உள்ளது. அதனால் இந்த குவாரி வருவதற்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. S. பிரதாப், பூனைத்தாங்கல் கிராமம்.**

இவர் கூறுகையில், கிரஷர் வருவதில் மக்களுக்கு சந்தோஷம் இருக்கிறதோ, இல்லையோ, அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பள்ளி நேரங்களில் காலை 7.30 முதல் 10 வரை லாரிகள் வராமல் இருப்பது நன்றாக இருக்கும். அதேபோன்று மாலை நேரத்தில் 4.30–6 வரை லாரிகள் வராமல் இருப்பது நன்றாக இருக்கும். கம்பெனி வண்டிகள் வருகிறது என்றால் லாரிகள் வழி விடுவதில்லை. வழி விட சொல்லுங்கள். இருசக்கர வாகனத்தில் சென்றாலும் ஹாரன் அடித்தாலும் லாரிகள் வழி விடுவதில்லை. ஓட்டுனர்களிடம் சொல்லி வையுங்கள். வண்டிகளில் அதிக சுமை ஏற்றி செல்கிறார்கள்.

மேனல்லூரில் கற்கள் கீழே விழுகிறது. கோணிப்பை போட்டு மூடி செல்ல வேண்டும். ஆனால் அவர்கள் கோணிப்பை போட்டும் மூடுவதில்லை. கொஞ்சம் சொல்லி வையுங்கள் என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**7. திரு. முனியாண்டி, மேனல்லூர் கிராமம்**

இவர் கூறுகையில், நான் அதிகமாக சொல்ல விரும்பவில்லை. ஏற்கனவே, ஊராட்சி மன்ற தலைவர் குப்பன் அவர்கள் அனைத்தையும் உரையாற்றி விட்டார். அவர் உரையாற்றியதை தான் நானும் உரையாற்ற வேண்டும். வேறு எதுவும் இல்லை. ஆனால் ஸ்ரீ கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் அவர்கள் ஏழை மக்கள் அனைவருக்கும் உதவி செய்கிறார்கள். அவர்கள் கேட்கின்ற பொழுது யாருக்கும் எதையும் இல்லை என்று சொல்வதில்லை. பள்ளிகளுக்கும் சரி, கிராமத்திற்கும் சரி, திருவிழாக்களுக்கும் சரி அனைவருக்கும் வாரி தான் தருகிறார்களே தவிர இல்லை என்று சொல்வதில்லை நல்லபடியாக கிரஷர் ஓடுகிறது. அவர் கூறியது போல இவருடைய கிரஷரில் இருந்து சக்கைகள் செல்லவில்லை. வேறு ஒரு கிரஷரில் இருந்து தான் சக்கைகள் மேனல்லூர் வழியாக செல்கிறது. இவரது கிரஷரில் இருந்து சக்கைகள் இந்த வழியாக வருவதில்லை. இதை நான் மிகத் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல்குவாரி அனுமதி பெறுவதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம் என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. வெங்கடேசன், கிரிஜாபுரம் கிராமம்.**

இவர் கூறுகையில், " கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரி வருவதற்கு நான் வரவேற்கிறேன். எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. துரைமுருகன், மேனல்லூர் கிராமம்,**

இவர் கூறுகையில், "வருவாய் கோட்ட அலுவலர் ஐயா அவர்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அம்மா அவர்களுக்கும் வணக்கம். ஸ்ரீ

கணேஷ் புளூ மெட்டல்ஸ் யூனிட் 2 விதிமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக தொழில் செய்து வருகிறார்கள். இந்த குவாரி அமைவதனால் நமது மேனலூர் கிராமத்திற்கு இதுவரை 15 உயர் கோபுர விளக்குகள் அமைத்து தந்திருக்கிறார்கள். சாலை வசதிகள் குடிநீர் வசதிகள் அது மட்டுமல்லாமல் மீண்டும் ஒரு ஆரம்பப்பள்ளி பகவந்தபுரம் ஆரம்பப்பள்ளி மேனலூர் மேல்நிலைப்பள்ளி அனைத்திற்கும் ஏராளமான கட்டமைப்பு வசதிகள் செய்து தந்திருக்கிறார்கள். சென்ற முறை கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் 8 லட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள். வங்கி கணக்கில் 28 லட்சம் இருக்கிறது. ஒரு ஐந்தாறுப்பேர் சேர்ந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த 28 லட்சம் ரூபாயை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களிடம் அனுமதி வாங்கி மேல்நிலைப் பள்ளிக்கு லேப் கட்டுவதற்கு இருக்கிறோம். இதனால் பள்ளிக்கூடங்கள் நிறைய வளர்ச்சி அடைந்துள்ளது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அண்ணன் குப்பன் அவர்கள் நிறைய சொல்லிவிட்டார்கள். அதுபோல் இந்த தொழில் செய்வதால் நமது கிராமத்திற்கு நிறைய பயன் ஏற்படுகிறது. 90% நமது மேனல்லூர் கிராமத்திற்கு சாலை வசதி குடிதண்ணீர் வசதி மின்விளக்கு வசதி அனைத்தையும் அமைத்து தந்திருக்கிறோம். இந்த யாதவ தெரு மற்றும் முதலியார் தெரு இரண்டு மட்டும்தான் சிமெண்ட் சாலை ஒரு மாதத்திற்குள் போட்டு விடுவோம். இந்த தொழில் செய்வதால் நமது கிராமம் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. அவர்கள் பாதுகாப்பாக தொழில் செய்கிறார்கள். அதேபோல் நவீன முறையில் வெடிபொருட்கள் வந்திருக்கிறது. அதனால் கிராமத்திற்கு எந்த ஒரு இடையூறும் இல்லாமல் தொழில் செய்கிறார்கள். கோயில்களுக்கு நிறைய நிதி தருகிறார்கள். கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு எது கேட்டாலும் உதவி செய்து தருகிறார்கள். அதனால் இந்த குவாரிக்கு உரிமம் வழங்குவதற்கு நான் வரவேற்கிறேன். ஆதரவு தெரிவிக்கிறேன். நன்றி. வணக்கம், என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**10. திரு. வெங்கடேஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர்.**

இவர் கூறுகையில், மதிப்பிற்குரிய ஐயா. அனைவருக்கும் காலை வணக்கம். கணேஷ் புளூ மெட்டல்ஸ் நிர்வாகத்தை நான் உண்மையில் பாராட்டுகிறேன். அவர் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கத்தை மேம்படுத்துகிறார் . இந்த தொழில்திட்டத்தில், உள்ளூர் வேலைவாய்ப்பில் 38 பேர் முன்மொழியப்பட்டுள்ளனர். மேனல்லூர் மற்றும் கிரிஜாபுரம் கிராமங்களிலுள்ள உள்ளூர் மக்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத திறமையான வேலைவாய்ப்புகள் வழங்குவதற்காக கூறப்பட்டுள்ளது. மேலும் தோட்டங்கள், அடர்த்தியான மரங்கள் வளர்க்க உள்ளதாக முன்மொழியப்பட்டுள்ளது. இதனால் தூசி கட்டுப்படுத்தப்படும் என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. T. இரத்தினம், கிரிஜாபுரம் கிராமம்.**

இவர் கூறுகையில், " இந்த கணேஷ் ப்ளூ மெட்டல்ஸ் குவாரி வருவதற்கு நான் முழுமனதாக வரவேற்கிறேன்." என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 27 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 26 நபர்கள் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. சம்பத்,<br>வெம்பாக்கம்,<br>திருவண்ணாமலை. | குவாரி குறித்து பொதுவான கோரிக்கையினை தெரிவித்துள்ளார். |
| 2. | திருமதி. அவுட்டா மங்கம்மா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திருமதி. குண்டால சாய்தாமா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 4. | திருமதி. K. சாரதா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திரு. R. வெங்கடேஷ்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு. J. ராஜா,<br>தர்மபுரி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திரு. T. சட்டி ரெட்டி ,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு. V. மணிகண்டன்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. M. சிவநாதன்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு. V. சுரேஷ்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திரு.K. சரவணா,<br>காஞ்சிபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திரு. U. சங்கரய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 13. | திரு. K.S. சீனுவாச மூர்த்தி,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 14. | திரு. S. அங்கய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 15. | திரு. B. பாலகிருஷ்ணா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 16. | திரு. U. இராமசந்திரா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 17. | திரு. கயாபட்டி நரேஷ்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 18. | திரு. B. சுன்னா ராய்,<br>திருப்பதி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. வெங்கடேஷ் பாயா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 20. | திரு. S. நரசிம்மலு,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 21. | திருமதி. S. பாத்திமா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 22. | திரு. A. சுப்ரமணியம்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 23. | திரு. T. சுதாகர்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 24. | திரு. S. வெங்கட சுப்பய்யா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 25. | திரு. M. முத்துராஜா,<br>இராமநாதபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 26. | திருமதி. அக்காலயா டொட்டி,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 27. | பாலே நவீன் குமார், தெலுங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 02.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.

3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (12 பக்கங்கள்/75 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 27 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

(1/6)

**வருவாய் கோட்ட அலுவலர்(முகூபொ),**
**செய்யாறு.**